# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2157/22 - 2020 ජනවාරි මස 08 වැනි බදාදා - 2020.01.08

*2157/22 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத் தத்துவங்களையும் மற்றும் பணிகளையும் குறித்த சட்டத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றும் பொறுப்புக்களையும் அதற்கான அதிகாரத் தத்துவங்களையும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அவர்களுக்கு பரவலாக்கல் செய்து அரசியலமைப்பின் 44(5) ஆம் உறுப்புரையில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க இத்தால் அறியத் தருகின்றேன் என்பதுடன் அமைச்சின் விடயப் பரப்பில் வருகின்ற கருமங்கள் பற்றி ஆராய்ந்து பார்த்தல், மத்தியஸ்தப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் முதலியனவற்றில் அவருக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பிரசன்ன ரணதுங்க,**
கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

2020, சனவரி 07.

**அட்டவணை**

***கௌரவ கெஹலிய ரம்புக்வெல்ல, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும்* |
| 1. பொருளாதார அபிவிருத்தியின் போது முதலீடுகளை அதிகரிப்பதற்காக புதிய மூலோபாயங்களை வடிவமைப்பதற்காக உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல். | 1. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் குறைந்த பாவனைச் சொத்துக்களின் முதலீடு. | 1. (2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) குறைந்த பாவனை உடைய சொத்துக்களையும் குறைவான செயல்திறன் கொண்ட நிறுவனங்களையும் மீளாய்வு செய்தல். |

1A - G 31483 — 42 (2020/01)

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***கௌரவ கெஹலிய ரம்புக்வெல்ல, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் கட்டளைச் சட்டங்களும்* |
| 2. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் குறைந்த பயன்பாட்டுச் சொத்துக்களின் மீதான வருமானத்தை உயர்த்துவதற்காக கொள்கைகள், உபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல். | | |
| 3. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் குறைந்த பயன்பாட்டுச் சொத்துக்களின் மீது முதலீடுகளை மேற்கொள்ளுவதன் மூலம் சொல்லப்பட்ட நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றீடு செய்தல். | | |
| 4. முதலீட்டுச் சபையில் தற்போது நிலவும் முதலீட்டு மேம்பாட்டு வலயங்களை உச்ச கட்டப் பயன்பாட்டுக்காக முதலீடுகளை மேம்படுத்துதல். | | |
| 5. அரசின் பாரிய துறைகளான விவசாயம், சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பம் முதலிய துறைகளில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்தல். | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.